**கவனிக்க.**-2023.01.13 ஆந் திகதிய 2315 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2316 - 2023 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2023.01.20**

*2316 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - | நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| முன்னறிவித்தல்கள் | - | மேல் மாகாணம் | - |
| இறுதிக் கட்டளைகள் | - | மத்திய மாகாணம் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - | தென் மாகாணம் | - |
| மேல் மாகாணம் | - | வட மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - | கிழக்கு மாகாணம் | - |
| தென் மாகாணம் | - | வடமேல் மாகாணம் | - |
| வட மாகாணம் | - | வடமத்திய மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - | ஊவா மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - | சப்பிரகமுவ மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - | காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| ஊவா மாகாணம் | - | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 22 |
| சப்பிரகமுவ மாகாணம் | - | காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - | நானாவித காணி அறிவித்தல்கள் | 22 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2023, பெப்புருவரி மாதம் 10ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, சனவரி மாதம் 27ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


21- B 082420 - 353 (2023/01)

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

இணைப்பு 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவிற்கேற்ப 1997 ஆம் ஆண்டு மாசி மாதம் 03 ஆந் திகதிய இலக்கம் 46/ஏ, லயிட் ரோட், கந்தளாயில் வசிக்கும் உதுவன் பதிரனகே மாட்டின் என்பவருக்கு Tri/ Kan/ Pra 5728 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் அலுவலகத்தில் பதிவேட்டின் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என கிழக்கு மாகாணசபைக்குட்பட்ட கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவின், காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடைப்பட்ட) தென்னகோன் முதியன்செலாகே சமரதுங்க பண்டார தென்னகோன் ஆகிய நான், இத்தால் அறியத்தருகின்றேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அழிப்பை ரத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந் நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2023. 02.10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

திருகோணமலை நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கந்தளாய் பற்று/ பாதியகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கந்தளாய் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 01 றூட் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு:-

வடக்கு : பாதை;
கிழக்கு : பாதை;
தெற்கு : இந்திக குணவர்தனவின் காணி;
மேற்கு : தசசிள் ஆராமய.

ரீ.எம்.எஸ். பண்டார தென்னகோன்,
காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கிடைப்பட்ட),
கந்தளாய்.

பிரதேச செயலகம்,
கந்தளாய்,
2022.08.31.

01- 172

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/39108.
மாகாணக் காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : EP/28/ Les/ Bat/Chen/425.

### அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூர்பத்து செங்கலடி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான சாருக்கடி கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த சாருக்கடி கிராமத்தின் நில வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 10 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித்துண்டினை சமய நடவடிக்கைகளின் பொருட்டு மட்டக்களப்பு தமிழ் பாடசாலைகள் நம்பிக்கைச் சபை என்னும் பெயரில் குத்தகைக்குக்கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி;
கிழக்கு : வீதி;

தெற்கு : பீபீ/மட்ட/670
மேற்கு : அரச காணி.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன் பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக காணியினை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது வருடங்கள் (30) (2022.06.30ஆந் திகதியிலிருந்து).

**வருடாந்தக் குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகைக்காக கௌரவ அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்ட வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதி 1/2 % ஆகும்.

*தவணைக் கட்டணம்:* அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்திப்படும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை சமய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக் கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தகைளுக்கும் இக் குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்கு தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2022.06.30 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்கு கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணத்தைத் தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைத் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

04. இவ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து இக்கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். ஜீ. தினாலி சதுரங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, திசெம்பர் 28.

01- 168